# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச்செய்தி எண் 01/2019 நாள் 09.01.2019

மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் மற்றும் பொதுச்செயலாளர் மு.அன்பரசு ஆகியோர் இணைந்து வெளியிடும் ஊடகச் செய்தி

### ஊடகச் செய்தி

**ஏ மற்றும் பி பிரிவு அரசு ஊழியர்களுக்கு பொங்கல் கருணைத் தொகை மறுப்பு**

**பாரம்பரிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க தமிழக முதல்வருக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வேண்டுகோள்!**

தமிழக அரசு ஆண்டு தோறும் அரசு ஊழியர்களுக்கு வழங்கும் மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியத்தை (பொங்கல் கருணைத்தொகை) இந்த ஆண்டு ஏ மற்றும் பி பிரிவு அரசு ஊழியர்களுக்கு இல்லை என அரசாணை வெளியிட்டுள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் பெற்றுவந்த பொங்கல் கருணைத் தொகை இந்த ஆண்டு மறுக்கப்பட்டுள்ளதிலிருந்து ஏற்கெனவே பெற்றிருந்த உரிமைகளில் ஒன்றை அரசு ஊழியர்களின் பெரும்பகுதியினர் மீண்டும் இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

எந்த அரசாங்கமும் இதுவரை இதுபோன்ற முடிவை எடுத்ததில்லை என்பதுடன் ஏற்கெனவே 21 மாத ஊதியமாற்ற நிலுவைத் தொகையை இழந்து நிற்கும் அரசு ஊழியர்களில் ஏ மற்றும் பி பிரிவினருக்கு இது வெந்த புண்ணில் பாய்ச்சிய வேலாக தைத்துள்ளது.

சென்ற ஆண்டுகளில் அரசு அறிவித்த மிகை ஊதியம் சி மறும் டி பிரிவு ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை தற்காலிக மிகை ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டு ரூ.3000/- உச்சவரம்பாக வைக்கப்பட்டு கணக்கிடப்பட்டும், ஏ மற்றும்

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
# Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


பி பிரிவு ஊழியர்களுக்கு சிறப்பு தற்காலிக மிகை ஊதியமாக ரூ.1000/- ஆக நிர்ணயிக்கப்பட்டு கடந்த காலங்களில் கொடுக்கப்பட்டு வந்ததை, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அனைத்து பிரிவினருக்கும் 30 நாள் ஊதியத்திற்கு இணையான தொகை வழங்க வேண்டுமென்றும், உச்சவரம்பை நிர்ணயிக்கக்கூடாது என்றும் வேண்டுகோளும், கோரிக்கையும், பிரதிநிதித்துவமும் கொடுத்திருந்த நிலையில் தமிழக அரசோ, அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்காததோடு மட்டுமல்லாமல் மீண்டும் ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களுக்கு கொடுத்துவந்த சிறப்பு தற்காலிக மிகை ஊதியமான ரூ.1000/-ஐ இல்லை என கைவிரித்திருப்பது அரசுத்துறைகளில் பணிபுரியும் அனைத்து ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களையும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

பல்கலைக் கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு/ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதம், அனைத்திந்தியப் பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட ஏ மற்றும் பி பிரிவைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் இந்த மிகைத்திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள் என்றும் அவர்கள் எந்தவொரு மிகை ஊதியத் தொகையை பெறவும் தகுதி உடையவர்கள் அல்லர் என்றும் காரணம் காட்டி ஏ மற்றும் பி பிரிவு அரசு ஊழியர்கள் இத்தனை ஆண்டுகள் பெற்றுவந்த சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை தரமுடியாததற்கு நியாயமற்ற காரணம் காட்டியுள்ள இவ்வரசு, மத்திய அரசு ஊழியர்கள் பெற்றுவரும் பல சலுகைகளை தமிழக அரசு ஊழியர்களுக்கு கொடுக்காமல் இருப்பதற்கு காரணங்களையும் விளக்கினால் அதற்கான நியாயங்கள் தெளிவுபடும்.

காலங்காலமாக அரசு ஊழியர்கள் பெற்றுவந்த உரிமையை, அதுவும் தமிழர்கள் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடும் வகையில் வழங்கப்படும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை, அது சொற்பத் தொகையாக இருந்தபோதிலும் தர மறுத்து அதற்கு ஒரு தகுதியற்ற நியாயம் கற்பித்திருப்பது எந்த ஒரு அரசுக்கும் ஏற்புடைய செயல் அல்ல.

எனவே, தமிழகத்தில் அரசுத்துறைகளில் பணிபுரியும் அனைத்து ஏ மற்றும் பி பிரிவினருக்கு சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை மற்ற பிரிவினருக்கு வழங்கியது போல் வழங்கி அனைத்து அரசு ஊழியர்களும் தமிழர் திருநாளை உற்சாகமாக கொண்டாட அரசு உரிய அரசாணை திருத்தி பிறப்பிக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறோம். ஏற்கெனவே 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை பிடித்து வைத்துள்ள நிலையில் பொங்கல் கருணைத் தொகையிலும் கை வைத்திருக்கும் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதாகும். அரசு ஊழியர்களின் உள்ளக்கிடக்கையை முழுதும் உணர்ந்து அரசு உடனடியாக திருத்திய அரசாணை பிறப்பிப்பதுடன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்பட்டு வரும் பொங்கல் கருணைத் தொகை தொடர்வதன் மூலமாக அரசு தன் ஊழியர்களின் பாரம்பரிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

**(மு.அன்பரசு)**
பொதுச்செயலாளர்